# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஐந்தாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - நோற்ற நோன்பு
## ப்ராபக நிஷ்கர்ஷம் செய்யும் திருவாய்மொழிகளில் முதலாவது;
## ஆழ்வார் தமது ஆகிஞ்சன்யத்தை [கைம்முதல் இல்லாமையை] எடுத்துக் கூறி வானமாமலைப் பெருமானிடத்தில் ப்ரபத்தி பண்ணுதல்

** நோற்ற நோன்பிலேன் * நுண்ணறிவு இலேன் *
ஆகிலும் இனி உன்னை விட்டு ஒன்றும்
ஆற்ற கிற்கின்றிலேன் * அரவின் அணை அம்மானே! **
சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் * சிரீவர மங்கல நகர் *
வீற்றிருந்த எந்தாய்! * உனக்கு மிகை அல்லேன் அங்கே 1

அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன் *
உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து * நான்
எங்குற்றேனும் அல்லேன் * இலங்கை செற்ற அம்மானே! **
திங்கள் சேர் மணி மாட நீடு * சிரீவர மங்கல நகர் உறை *
சங்கு சக்கரத்தாய்! * தமியேனுக்கு அருளாயே 2

கருளப் புட்கொடி சக்கரப் படை *
வான நாட! என் கார் முகில் வண்ணா *
பொருள் அல்லாத என்னைப் பொருள் ஆக்கி * அடிமை கொன்டாய் **
தெருள் கொள் நான்மறை வல்லவர் பலர் வாழ் * சிரீவர மங்கல நகர்க்கு *
அருள் செய்து அங்கு இருந்தாய்! * அறியேன் ஒரு கைம்மாறே 3

மாறு சேர் படை நூற்றுவர் மங்க *
ஓர் ஐவர்க்காய் அன்று மாயப் போர் பண்ணி *
நீறு செய்த எந்தாய்! * நிலம் கீண்ட அம்மானே! **
தேறு ஞானத்தர் வேத வேள்வி அறாச் * சிரீவர மங்கல நகர் *
ஏறி வீற்றிருந்தாய்! * உன்னை எங்கு எய்தக் கூவுவனே? 4

எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு? *
எவ்வ தெவ்வத்துளாயும் ஆய் நின்று *
கைதவங்கள் செய்யும் * கரு மேனி அம்மானே! **
செய்த வேள்வியர் வையத் தேவர் அறாச் * சிரீவர மங்கல நகர் *
கை தொழ இருந்தாய் * அது நானும் கண்டேனே 5

** ஏனமாய் நிலம் கீண்ட என் அப்பனே! கண்ணா! *
என்றும் என்னை ஆளுடை *
வான நாயகனே! * மணி மாணிக்கச் சுடரே **
தேன மாம் பொழில் தண் சிரீவர மங்கலத்தவர் * கை தொழ உறை *
வானமாமலையே! * அடியேன் தொழ வந்தருளே 6

வந்தருளி என் நெஞ்சு இடம் கொண்ட *
வானவர் கொழுந்தே! * உலகுக்கு ஓர்
முந்தைத் தாய் தந்தையே! * முழு ஏழ் உலகும் உண்டாய் **
செந்தொழிலவர் வேத வேள்வி அறாச் * சிரீவர மங்கல நகர் *
அந்தம் இல் புகழாய்! * அடியேனை அகற்றேலே 7

அகற்ற நீ வைத்த மாய வல் ஐம்புலன்கள் ஆம் அவை *
நன்கு அறிந்தனன் *
அகற்றி என்னையும் நீ * அருஞ்சேற்றில் வீழ்த்தி கண்டாய் **
பகற் கதிர் மணி மாட நீடு * சிரீவர மங்கை வாணனே! * என்றும்
புகற்கு அரிய எந்தாய்! * புள்ளின் வாய் பிளந்தானே! 8

புள்ளின் வாய் பிளந்தாய்! மருது இடை போயினாய்! *
எருது ஏழ் அடர்த்த * என்
கள்ள மாயவனே! * கரு மாணிக்கச் சுடரே **
தெள்ளியார் திரு நான்மறைகள் வல்லார் * மலி தண் சிரீவர மங்கை *
உள் இருந்த எந்தாய்! * அருளாய் உய்யும் ஆறு எனக்கே 9

ஆறெனக்கு நின் பாதமே * சரணாகத் தந்து ஒழிந்தாய் *
உனக்கு ஓர் கைம்
மாறு நான் ஒன்றிலேன் * எனது ஆவியும் உனதே **
சேறு கொள் கரும்பும் பெருஞ்செந்நெலும் * மலி தண் சிரீவர மங்கை *
நாறு பூந்தண் துழாய் முடியாய்! * தெய்வ நாயகனே! 10

** தெய்வ நாயகன் நாரணன் * திரிவிக்கிரமன் அடி இணை மிசை *
கொய் கொள் பூம்பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் **
செய்த ஆயிரத்துள் இவை * தண் சிரீவர மங்கை மேய பத்துடன் *
வைகல் பாட வல்லார் * வானோர்க்கு ஆரா அமுதே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**